**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. II, PONNERI**

**Case No : CC No.192/2022**
**Prosecution Witness : PW 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : வேலு | | : |
| Father / Husband Name | : சங்கர் | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present.)

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 15/03/2024

**முதல் விசாரணை ( அரசு தரப்பில் )**

நான் தற்போது எண்.17, சி.கே. மாணிக்கனார் தெரு, செங்குன்றம் என்ற முகவரியில் குடியிருந்து எலக்ட்ரீசியனாக வேலை செய்து வருகிறேன். கடந்த 21.01.2022ஆம் தேதி இரவு 10 மணியளவில் செங்குன்றம் பஸ் ஸ்டாப் அருகே பாபா மொபைல் ஷாப் அருகே சுமார் 60 வயது மதிக்கதக்க ஒருவர் நடந்து வந்தார். இருசக்கர வாகனம் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி சத்தம் கேட்டு நான் அங்கு சென்று பார்த்தேன். அவருக்கு தலையில் அடிப்பட்டிருந்தது. பின்பு 108 ஆம்புலன்ஸ் வந்ததும், மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில் )**

நான் விபத்தினை சத்தம் கேட்ட பிறகுதான் சென்று பார்த்தேன். விபத்தை ஏற்படுத்திய வாகனம் என்ன என்று எனக்கு தெரியாது. நான் வழக்கு சம்மந்தமாக போலீசாரிடம் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் விபத்து நடந்தது குறித்து 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்யவில்லை. காவல் நிலையத்தில் போலீசார் என்னிடம் வெற்று பேப்பரில் கையொப்பம் எதுவும் பெறவில்லை. நான் போலீசார் எழுதிக் கொடுத்த பேப்பரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும், சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், நான் போலீசார் கேட்டுக் கொண்டதின் பேரில் இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.